# அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - நோர்வே
# அன்னைத் தமிழ்முற்றப் போட்டி 25/26

2010பிறந்தவர்கள் பின்வரும் 10 குறள்களையும் ஒப்பித்தல் வேண்டும். விரும்பிய 2 குறள்களின் பொருள் விளக்கம் கூறுதல்.

**01. சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வந்தான்**
**பெற்றத்தால் பெற்ற பயன்.** (குறள் 524)

தன் சுற்றத்தால் தான் சூழப்படும்படி அவர்களைத் தழுவி வாழ்வதே ஒருவன் செல்வத்தைப் பெற்றதன் பயன் ஆகும்.

**02. இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**
**நல்லாற்றில் நின்ற துணை.** (குறள் 41)

இல்வாழ்வோரின் கடமை பரந்தது. இவர்கள் துறந்தோர், ஏழைகள், இறந்தோர் ஆகியோருக்கும் துணை.

**03. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது.** (குறள் 45)

குடும்ப வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கு இடையிலும் அன்பும் அறம் செய்யும் குணமும் இருக்குமானால், அதுவே அவ்வாழ்க்கையின் பண்பும் பயனுமாகும்.

**04. ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை**
**நோற்பாரின் நோன்மை யுடைத்து.** (குறள் 48)

அறம் தவறாது அன்பொழுகக் கூடிவாழும் வாழ்வே இல்லறம் எனச் சிறப்பிக்கப்பட்டது

**05. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்.** (குறள் 50)

அறம் சிறக்கும் பண்புடை மாந்தர் பண்புமிக்க இல்வாழ்வு வாழ்வர்

**06. இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு.** (குறள் 81)

இல்லத்தில் குடும்பத்தாரோடு கூடிப் பொருளீட்டி மகிழ்வாக வாழ்வதெல்லாம் விருந்தினரை போற்றிச் சிறப்பித்து வாழ்வதற்கே என்கின்றனர்.

**07. செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல்விருந்து வானத் தவர்க்கு.** (குறள் 86)

எமது வீட்டுக்கு வருவோரை அன்போடு வரவேற்க வேண்டும். அகத்தால் மிக மகிழ்ந்து அன்போடு உணவளிக்க வேண்டும்.

**08. பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்**
**நன்மை கடலிற் பெரிது.** (குறள் 103)

பயன் எதையும் எதிர்பாராமல் ஒருவர் செய்த உதவியின் தன்மையை ஆராய்ந்தால் அதன் நன்மை கடலைவிடப் பெரியதாகும்.

**09. கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு**
**புண்ணுடையர் கல்லா தவர்.** (குறள் 393)

கண்ணுடையவர் என்று சொல்வதற்குரியவர் கற்றவரே. கல்லாதவர் தங்களுடைய முகத்தில் இரண்டு புண்களை உடையவராவர்.

**10. நாடென்ப நாடா வளத்தன நாடல்ல**
**நாட வளந்தரு நாடு.** (குறள் 739)

தன் நாட்டில் வாழும் மக்களுக்கு வேண்டிய செல்வங்களைத் தன்னகத்தே கொண்ட நாடு வளம் நிறைந்த நாடு. பிற நாடுகளின் உதவியை நாடி நிற்கும் நாடு வளம் நிறைந்த நாடாகாது.

**வளாகங்களில் முதல் மூன்று நிலைகளையும் அடைந்த மாணவர்கள் அன்னைத் தமிழ்முற்றப் போட்டியில் பங்குபெறும் வாய்ப்பைப் பெறுவார்கள்.**

அனைத்து மாணவர்களுக்கும் இப்பிரதி வழங்கப்படுகிறது.மாணவர்களை ஊக்கப்படுத்துவது ஆசிரியர் கடமை. மாணவர்களை தயார்ப்படுத்துவது பெற்றோரினது கடமை